# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 30 ஞாயிறு 15.08.2021 மலர் - 2, இதழ் - 131


## இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகள்



# வேளாண் பட்ஜெட் - ஒரு பார்வை

தமிழக சட்டசபையில், முதல்முறையாக வேளாண்மைக்கென தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதனை, அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். வாழ்த்துகள். ஆனால், எடுத்த எடுப்பிலேயே, வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராடும் விவசாயிகளுக்கு இந்த பட்ஜெட் காணிக்கை' என அவர் கூறியுள்ளார். இது விவசாயிகளுக்கு மத்திய அரசு செய்து வரும் நன்மைகள், மத்திய அரசின் புதிய விவசாய கொள்கையால் வேளாண் பெருங்குடி மக்கள் அடைந்து வரும் பலன்களை ஒப்புக்கொள்ளாமல் மறைக்கும் முயற்சியாகவே தெரிகிறது.

தி.மு.க ஆட்சியில் அமர்ந்து 100 நாட்களாகியும்கூட இன்னமும் தன்னை ஒரு எதிர்கட்சியாகவே பாவித்து செயல்படுகிறது, பிரிவினைவாத மனப்பான்மை, குறுகிய எண்ணங்கள் எதுவும் மாறவில்லை என்பதையே அவரின் இந்த அறிவிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

விவசாயிகளின் கருத்துகள் உள்வாங்கி வேளாண் பட்ஜெட் தயாரிக்கப்பட்டு உள்ளது என்கிறார் சரி. ஆனல், உலகளாவிய வேளாண் வல்லுநர்களின் கருத்துகளும் கேட்கப்பட்டு உள்ளது என்று சொல்கிறாரே, அப்படி என்ன அறிவித்துள்ளார் என தேடிப் பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை எதுவும் தென்படவில்லை. உதாரணமாக, 'மழையில் நெல்மூட்டைகள் பாதிக்கப்படுவதை தடுக்க ரூ. 52.02 கோடியில் விவசாயிகளுக்கு 'தார்ப்பாய்கள்' வழங்கப்படும்' என அறிவித்துள்ளார்.

தார்ப்பாய்களை வழங்குவதைவிட, நிரந்தர கொட்டகை, அதில் உயர்த்தப்பட்ட மேடை என கட்டிக் கொடுத்தால்

பல வருடங்களுக்கு அது நிலைத்து நிற்குமே, அதை ஏன் செய்ய முயலவில்லை!? இந்த வகையில்தான் அவரது பல அறிவிப்புகளும் உள்ளன. உழவர் சந்தைகளை புனரமைத்து நவீனப்படுத்த ரூ.12.50 கோடி ஒதுக்கீடு என அறிவித்துள்ளார். முன்பு இவர்கள் அமைத்த உழவர் சந்தைகள் என்ன ஆனது, அது எப்படி சீரழிந்தது என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். பெரும்பாலான மொத்த வியாபாரிகள் தி.மு.க விசுவாசிகளே எனும்போது, அவர்களுக்கு லாபம் தராத உழவர் சந்தைகள் வெற்றிகரமாக நடக்குமா என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது.



விஜயபாரதம்

பல திட்டங்களுக்கு கருணாநிதியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் திட்டத்தில் சூரிய சக்தி பம்பு செட்கள் அமைக்கப்படும் என்கிறார் அமைச்சர். ஆனால், அதில் மாநில அரசின் மானியம் எவ்வளவு, மத்திய அரசின் மானியம் எவ்வளவு என தெரிவிக்கவில்லை. உணவு தன்னிறைவை தமிழகம் ஓரளவிற்கு எட்டிவிட்டது என ஒப்புக்கொண்ட அமைச்சர் அது எந்த ஆட்சி காலத்தில் நடந்தது என்பதை மறைத்துவிட்டார்.

நடப்பு நிதியாண்டில் 4.6 லட்சம் ஏக்கரில் நெல்சாகுபடி செய்யப்பட்டது. இது பெரிய சாதனை என கூறப்பட்டுள்ளது. ஆனால், அதில் முந்தைய அ.தி.மு.க அரசிற்கு பெரிம் பங்கு உள்ளது என்பது திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளது. இல்லையில்லை, இது முழுக்க முழுக்க எங்கள் சாதனைதான் என்று இவர்கள் கூறுவார்களேயானல், ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து முளைத்து வீணானதற்கும் இவர்கள்தான் பொறுப்பு என்பதை ஒப்புக்கொள்கிறார்கள் என்றே அர்த்தம்.

கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ. 2,750 ல் இருந்து ரூ. 2,900 ஆக உயர்த்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகை ரூ.1,200 கோடி எப்போது விடுவிக்கப்படும். வேளாண் கடனாக ரூ.1.45 லட்சம் கோடி வழங்க விரிவான திட்டம் என மொட்டையாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது அடுத்த 8 மாதங்களுக்கா, அல்லது ஐந்து வருடங்களுக்கா, தரப்போவது தமிழக அரசின் பணமா, மத்திய அரசின் நிதியா? இதுவும் வழக்கம்போல தி.மு.க ஸ்டிக்கருடன் தரப்படுகிறதா, இதற்கான நிதி ஆதாரம் என்ன? என்ற எந்த கேள்விக்கும் பதில் இல்லை.

நிதியமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் வாசித்த தி.மு.க அரசின் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டவற்றில் பெரும்பாலான திட்டங்கள் அனைத்தும் முந்தைய அ.தி. மு.க அரசின் திட்டங்கள், தற்போது நடைபெற்று வரும் மத்திய அரசு திட்டங்கள்தான். அவை பெயர் மாற்றம் பெற்று தி.மு.க ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு வெளியானதை யாரும் மறுக்க முடியாது. தற்போது வெளியாகியுள்ள வேளாண் பட்ஜெட்டும் அந்த ரகமாகத்தான் தெரிகிறது.

மதிமுகன்

# வேலூர் இப்ராஹிம் குற்றச்சாட்டு



விஜயபாரதம்

பா.ஜ.கவின் சிறுபான்மை பிரிவு தேசிய செயலாளரான வேலூர் இப்ராஹிம், பா.ஜ.கவின் மதுரை நகர் சிறுபான்மையினர் அணி சார்பில் திருப்பரங்குன்றத்தில் நடந்த மத நல்லிணக்க கலந்துரையாடலில் கலந்துகொண்டு பேசினார். அப்போது, பாரதம் முழுவதும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் பா.ஜ.கவில் அதிகளவில் இணைகின்றனர். இதை பொறுத்துக்கொள்ள முடியாத பயங்கரவாத, பிரிவினைவாத சக்திகளும் தேச விரோத கட்சிகளும் சிறுபான்மையினரை அச்சுறுத்துகின்றனர். தமிழகத்திலும் அதேபோன்ற நிலைதான் தொடர்ந்து கொண்டுள்ளது. தி.மு.க ஆட்சியில் முஸ்லிம்களிடம் பா.ஜ.க'வை கொண்டு செல்லும் நிர்வாகிகளுக்கு உரிய பாதுகாப்பு தருவதில்லை. முஸ்லிம் பகுதிகளுக்கு நாங்கள் செல்ல தடை விதிக்கின்றனர். சிறுபான்மை மக்கள் தாக்கப்படுவது தி.மு.க ஆட்சியில்தான் என உறுதியாக கூற முடியும். தி.மு.க ஆட்சியில் தான் அடிப்படைவாத சக்திகள் பலம் பெறுகின்றனர். இளைஞர்களை தவறாக வழி நடத்துகின்றனர்' என்றார்.

# உண்மை வேறு மாதிரி



விஜயபாரதம்

கோவை மாவட்டம் கோபி ராசிபுரத்தை சேர்ந்தவர் கோபால்சாமி. விவசாயியான இவர் ஒட்டர் பாளையம் வி.ஏ.ஓ கலைச்செல்வியிடம் இட கிரையம் சம்பந்தமான ஆவணங்களை பெறச்சென்ற பொழுது வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை வி.ஏ.ஓவின் உதவியாளர் முத்துச்சாமி தட்டிக்கேட்டார். வாக்குவாதம் முற்றி தகராறு ஏற்பட்டது. கோபால்சாமியை முத்துசாமி தள்ளி விட்டார். பின்னர் கீழே விழுந்த கோபால்சாமியிடம் முத்துசாமி காலில் விழுந்து மன்னிப்பு கேட்டார். அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானதால் பரபரப்பானது. பட்டியலினத்தை சேர்ந்த அரசு ஊழியரை விவசாயி காலில் விழவைத்தார் என பிரச்சனை வேறு பக்கம் திரும்பியது. ஆட்சியர் உத்தரவின் பேரில் விசாரணை குழு விசாரித்து வருகிறது. இதனிடையே, கோபால்சாமி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதில், முத்துசாமி தன்னை தாக்கினார், தனது தந்தை சொத்தை தனக்கு தெரியாமல் வி.ஏ.ஓ வேறு ஒருவருக்கு பெயர் மாற்றி கொடுத்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே வெளியான வீடியோவுக்கு நேர்மாறாக வி.ஏஓ.வின் உதவியாளர் முத்துசாமி, விவசாயி கோபால்சாமியை முதலில் தாக்கும் வீடியோ தற்போது வெளியாகியுள்ளது. வீடியோ எடுக்கப்படுகிறது என தெரிந்ததும் காலில் விழுவதாக நடித்ததும் அம்பலமாகியுள்ளது.

# அதிகரிக்கும் கடன் சுமை

ஏற்கனவே தமிழக மக்கள் ஒவ்வொருவரின் தலையிலும் 2.6 லட்சத்திற்கும் அதிகமான கடன் உள்ளதாக தமிழக நிதியமைச்சர் தனது வெள்ளை அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதனையே தமிழக அரசு அடைக்க முடியுமா முடியாதா என தெரியாத சூழலில், நடப்பு நிதியாண்டில் 92 ஆயிரத்து 482 கோடி ரூபாய் கடன் வாங்க மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் 40 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்டுள்ளது என, தமிழக அரசின் நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இதன்மூலம் தமிழக அரசின் மொத்த கடன் ரூ.5,77,987 கோடியாக உயரும். பழைய கடனையே அடைக்க வழி தெரியாமல் தினறும் தி.மு.க அரசு, வரும் 8 மாதங்களில் மட்டுமே வாங்கவுள்ள இந்த மாபெரும் கடனை எப்படி அடைக்கப்போகிறது?

விஜயபாரதம்




# ஓ.பி.எஸ். விமர்சனம்

அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், தி.மு.க பட்ஜெட் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், 'விடியலை நோக்கி என்று தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி, ‘எரிவாயு சிலிண்டருக்கு 100 ரூபாய் மானியம்’, ‘மாதம் ஒரு முறை மின் கட்டணம்’, ‘முதியோர் உதவித் தொகை 1,500 ரூபாயாக அதிகரிப்பு’, ‘கல்விக் கடன் ரத்து’, ‘நகைக் கடன் ரத்து, ‘மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய், ’60 வயதிற்கு மேற்பட்டோரின் உதவித் தொகை 1500 ரூபாய்’ உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசி, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த தி.மு.க. அரசின் முதல் நிதி நிலை அறிக்கை ‘விரக்தியை நோக்கி’ மக்களை அழைத்துச் சென்றிருக்கிறது. இது, சாதனைகளே இல்லாத சோதனைகள் நிறைந்த வேதனையான நிதிநிலை அறிக்கை. தி.மு.க பொய்யான வாக்குறுதிகளை மக்களிடம் அளித்தது இதன் மூலம் அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது' என கூறி பட்ஜெட்டில் உள்ள முரண்களை பட்டியலிட்டுள்ளார். விஜயபாரதம்



# பிரிவினை நினைவு தினம்



விஜயபாரதம்

பாரதம் சுதந்திரம் அடைந்து 75வது ஆண்டை நாம் கொண்டாடும் நிலையில், பாரதம் பாகிஸ்தான் பிரிவினையை, அதன் வலியை, அப்போது நடந்த கொடூரங்களை நாம் மறக்க முடியாது. இன்றைய இளம் தலைமுறையினருக்கு அது குறித்து அதிகம் தெரியாது. ஆனால், அதனை அவர்களுக்கு தெரியவைக்க வேண்டியது மூத்தவர்களின் கடமை. இதனை மக்கள் அறியும் விதமாக, பிரதமர் மோடி, ஆகஸ்ட் 14 பிரிவினை நினைவு தினமாக அனுசரிக்கப்படும் என தெரிவித்துள்ளார். இது குறித்த அவரது டுவிட்டர் பதிவில், ' பிரிவினையின் வலிகளை ஒருபோதும் மறக்க முடியாது. லட்சக்கணக்கான எங்கள் சகோதரிகள், சகோதரர்கள் இடம் பெயர்ந்தனர். இரக்கமற்ற வெறுப்பு, வன்முறையால் பலர் தங்கள் வாழ்க்கையை இழந்தனர். நமது மக்களின் போராட்டங்கள், அவர்களின் தியாகங்களின் நினைவாக, ஆகஸ்ட் 14ம் தேதி, பிரிவினை நினைவு தினமாக அனுசரிக்கப்படும். சமூகப் பிளவுகள், ஒற்றுமையின்மை என்ற விஷங்களை அகற்றி, ஒற்றுமை, சமூக நல்லிணக்கம், ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரிவினை நினைவு தினம் நமக்கு நினைவூட்டட்டும்' என தெரிவித்துள்ளார்.

---

# மாநகராட்சியின் பொருந்தா விளக்கம்



விஜயபாரதம்

சென்னை மாநகராட்சி குப்பை அள்ளும் வண்டியில் சிலுவை போன்ற லோகோ வரையப்பட்ட படம் சமூக ஊடகங்களில் வெளியானது. இதனால், சென்னை மாநகராட்சியும் தமிழக அரசும் கிறிஸ்தவ மிஷனரிகளின் பிடியில் இருப்பதாக சமூகவலைதளங்களில் கருத்துகள் பதிவிடப்பட்டது. இதனால் வேறு வழியின்றி அந்த வண்டியில் லோகோவை மாநகராட்சி அவசர அவசரமாக மாற்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. பழைய லோகோவை மாற்றி வரைய முயற்சித்தபோது அது சிலுவை போன்று மாறிவிட்டதாக ஒரு பொருந்தாத விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மற்ற வாகனங்களில் உள்ள லோகாவும் விரைவில் மாற்றி சரிசெய்யப்படும், சென்னை மாநகராட்சியின் வாகனங்களில் மூவேந்தர்களின் சின்னங்களான மீன், புலி, வில் உள்ளடக்கிய புதிய லோகோ இடம் பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

# நகைக்கடன் தள்ளுபடி கிடைக்குமா?



விஜயபாரதம்

எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, தனது அறிக்கையில், 'ஏச்சு பிழைக்கும் தொழிலே சரிதானா? எண்ணிப் பாருங்க... ஐயா எண்ணிப் பாருங்க' என்ற எம்.ஜி.ஆர் பாடிய பாடல்தான் நினைவுக்கு வருகின்றது. ஏமாறுவதற்கு ஆள் இருக்கின்றவரை ஏமாற்றிக் கொண்டிருக்கலாம் என்ற கொள்கையின் அடிப்படையில், திமுகவின் விடியா அரசு செயல்படுகிறது. இந்தஆட்சியின் 100 நாள் செயல்பாடுகளிலேயே ஏமாற்றம் அடைந்த மக்கள் விழி பிதுங்கி நிற்கிறார்கள். ஆட்சிக்கு வந்தால், 5 சவரன் வரை நகைக் கடன் தள்ளுபடி செய்வோம் என்று வாக்குறுதி அளித்தவர்கள், அந்த கடன் தள்ளுபடி சலுகை பலருக்கு கிடைக்கக் கூடாது என்று என்னும் அளவுக்கு, 2018 முதல் 2020 வரையிலான கடன் மட்டுமே தள்ளுபடி, மத்திய மாநில அரசு ஊழியராக இருக்கக் கூடாது, வருமான வரி செலுத்துபவராக இருக்கக் கூடாது, ஆண்டு வருவாய் ஒரு லட்சத்திற்குமேல் இருக்கக் கூடாது, கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியக் கூடாது, குடும்பத்தில் ஒருவர் மட்டுமே கடன் பெற்றிருக்க வேண்டும் என்பது போன்ற பல்வேறு நிபந்தனைகளை விதிக்க செய்துள்ளதாகத் தகவல்கள் வருகின்றன' என கூறியுள்ளார்.

# பிளாஸ்டிக் தடை



விஜயபாரதம்

ஒருமுறை மட்டுமே பயன்படுத்த கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. அடுத்த ஆண்டு ஜூலை 1 முதல் இது அமல்படுத்தப்படும் என மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை திருத்த சட்டம் 2021ஐ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. பிளாஸ்டிக் உற்பத்தி, இறக்குமதி, இருப்பு வைத்தல், விற்பனை செய்யவும் தடை விதிக்கப்படுகிறது. பிளாஸ்டிக் பைகளுக்கான தடிமன் 75 மைக்ரான் என்ற அளவுக்கு மேல் இருக்க வேண்டும் என்றும் செப்டம்பர் 30 ஆம் தேதி முதல் இது கட்டாயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பைகளின் தடிமன் அளவு 120 மைக்ரான் ஆக தற்போது உயர்த்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தை பொருத்தவரை ஏற்கனவே ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை அமலில் உள்ளது என்றாலும், கொரோனா பொதுமுடக்கம் ஏற்பட்ட காலம் முதல் அது சரிவர மக்களால் கடைபிடிக்கப்படவில்லை, அரசும் கவனிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


# பழையன கழிதலும்



விஜயபாரதம்

குஜராத், காந்தி நகரில் முதலீட்டாளர்கள் மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி 'வீடியோ கான்பரன்சிங்' வழியாக துவக்கி வைத்தார். பழைய வாகனங்கள் அழிப்பு தொடர்பான தேசிய கொள்கையையும் பிரதமர் அறிமுகம் செய்தார். அப்போது அவர், 'பழைய வாகன அழிப்பு, மறுசுழற்சி கொள்கை, தேசத்தின் நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். சுற்றுச்சூழல் பாதுகாப்பை மனதில்கொண்டே இக்கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. இது, பாரதத்தின் மோட்டார் வாகன துறையின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். கழிவுகளை செல்வமாக்கலாம். வாகன மாசு குறையும். மோட்டார் வாகன தயாரிப்பில் பாரதம் தன்னிறைவு பெற உதவும். வழிவகுக்கும். பழைய இரும்பு, உருக்கு இறக்குமதி குறையும். தன் பழைய வாகனத்தை மறுசுழற்சிக்கு தருபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். அவர்கள் புதிய வாகனம் வாங்கும்போது மீண்டும் பதிவு கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சாலை வரிகளிலும் அவர்களுக்கு சலுகை அளிக்கப்படும்' என தெரிவித்தார்.

# ஒரு வீட்டுக்கு நான்கு காரா?




விஜயபாரதம்

மஹாராஷ்டிராவின் தலைநகரான மும்பை, கடும் போக்குவரத்து நெரிசல், வாகனம் நிறுத்த போதிய இட வசதி இன்மை, வாகனங்களின் எண்ணிக்கை உயர்வு என அல்லல் படுகிறது. இந்நிலையில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டும் நிறுவனங்கள், கார் நிறுத்தும் இடத்தை குறைத்துக் கொள்ள மாநில அரசு சமீபத்தில் அனுமதி அளித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மும்பை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இம்மனுவை விசாரித்த நீதிபதிகள், 'புதிய கார்கள் வாங்குவது குறைக்கப்பட வேண்டும். வாகன நிறுத்த வசதி இல்லாத அடுக்குமாடி குடியிருப்புகளில், ஒரு குடும்பத்தினர் 4 அல்லது 5 கார்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. வாகன நிறுத்துமிடம் குறித்து முறையான கொள்கை வகுக்கப்படவில்லை எனில், எதிர்காலத்தில் மிகப் பெரிய குழப்பம் ஏற்படும். பொருளாதார வசதி இருக்கிறது என்பதற்காக வாகனங்களை வாங்கி குவிக்கக் கூடாது' என்று தெரிவித்தனர்.

## செங்கோட்டைக்குள் நுழைய சதி



விஜயபாரதம்

சுதந்திர தினத்தன்று லஷ்கர் இ தொய்பா பயங்கரவாதிகள், டெல்லியில் நாசவேலையை நடத்த திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறையினர் எச்சரித்திருந்தனர். இதனை அடுத்து கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டது. இந்நிலையில், தற்போது டெல்லியின் வழிபாட்டு தலங்களில் சட்டம் ஒழுங்கு பிரச்னையை உருவாக்கவும், காலிஸ்தான் பயங்கரவாத அமைப்பினர் சிலர், டெல்லி செங்கோட்டைக்குள் காவல்துறை அதிகாரிகள் வேடத்தில் நுழைய திட்டமிட்டுள்ளதாகவும் உளவுத் துறை புதிய எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதையடுத்து, செங்கோட்டையை சுற்றி பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## பயங்கரவாதிகளுக்கு உதவிய காவலர்கள்




விஜயபாரதம்

பஞ்சாப் மாநிலம் பதான் கோட்டில் உள்ள இந்திய விமானப்படை தளத்தில் கடந்த 2016ல் ஜெய்ஷ் இ முகமது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதில் விமானப்படை வீரர்கள் ஏழு பேர் வீர மரணம் அடைந்தனர். பாதுகாப்பு படையினரின் பதிலடியில் ஆறு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இது குறித்து, என்.ஐ.ஏ., விசாரித்து வருகிறது. இந்த பதான்கோட் தாக்குதல் பற்றி பத்திரிகையாளர்கள் அட்ரியன் லெவி, கேதி ஸ்காட்கிளார்க் ஆகியோர் எழுதியுள்ள 'ஸ்பை ஸ்டோரீஸ் இன்சைட் தி ஸீக்ரட் வேர்ல்டு ஆப் தி ரா & தி ஐ.எஸ்.ஐ' என்ற ஆங்கில புத்தகத்தில், ராவி ஆற்றின் கிளை நதியை கடந்துதன் பயங்கரவாதிகள் பதான்கோட் விமானப்படை தளத்துக்குள் நுழைந்தனர். பயங்கரவாதிகளிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்களுக்கு உள்ளூர் காவல் அதிகாரிகள் உதவியுள்ளனர். இதற்காக அப்பகுதியில் கண்காணிப்பு குறைக்கப்பட்டது. உள்ளூர் காவல் அதிகாரிகள் சிலருக்கு இந்த சம்பவம் நடக்கப்போவது முன்கூட்டியே தெரிந்திருந்தது' என தெரிவித்துள்ளனர்.

## நிவாரணத் தொகை நிறுத்தம்



விஜயபாரதம்

சில நாட்களுக்கு முன் டெல்லியில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில், அந்த சிறுமியின் குடும்பத்திற்கு அறிவிக்கப்பட்ட இழப்பீடுத் தொகையான ரூ. 10 லட்சத்தில் இடைக்கால நிவாரணமாக ரூ. 2.5 லட்சத்தை இழப்பீட்டுத் தொகையாக வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இவ்வழக்கில் ஒரு முக்கியத் திருப்பமாக, அந்த 9 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாரா என்பதை உறுதிப்படுத்த இதுவரை எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்று டெல்லி காவல்துறை நீதிமன்றத்தில் இடைக்கால அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இதனையடுத்து அந்த இடைக்கால நிவாரணத்தை நிறுத்தி வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# தாலிபான்களின் அரசை ஏற்பதில்லை



விஜயபாரதம்

ஆப்கானிஸ்தானில் உள்ள 34 மாகாணங்களில் 15க்கும் மேற்பட்டவற்றை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் தலிபான்கள். இரண்டாவது முக்கிய நகரமான காந்தஹாரும் அவர்களின் கைக்கு சென்றுவிட்டது. ஆப்கானிஸ்தானில் தலிபான் படைகள் இதே வேகத்தில் முன்னேறினால் ஓரிரு மாதங்களில் அப்படைகள் அந்நாட்டை முழுமையும் வசப்படுத்தி விடும் என அமெரிக்க ராணுவத்தின் உளவுத் துறை கணித்துள்ளது. காபுலில் அமெரிக்க தூதரகத்தில் பணிபுரிவோரை பத்திரமாக அழைத்துவர ஆப்கானிஸ்தானுக்கு 3 ஆயிரம் படையினரை அமெரிக்க அனுப்புகிறது. இதேபோல பிரிட்டன், கனடா உள்ளிட்ட நாட்டு தூதரகப் பணியாளர்களை அழைத்துவர அந்நாடுகளும் சிறப்புப் படைகளை ஆப்கனுக்கு அனுப்புகின்றன. இந்நிலையில், அந்நாட்டில் துப்பாக்கி முனையில் அமைக்கப்படும் அரசை அங்கீகரிக்கப் போவதில்லை என நமது பாரதம், சீனா, அமெரிக்கா உள்ளிட்ட 12 நாடுகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளன.


# ஆதீன சமாதிக்கு உதவிய இந்து முன்னணி




மதுரை ஆதீனம் 292வது குருமகா சன்னிதானம் அருணகிரிநாதர் திடீர் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பரிபூரணம் அடைந்தார். ஆதீன நிலத்தை குத்தகைக்கு எடுத்தவர்கள் அவருக்கான சமாதி அமைக்க இடம் கொடுக்க மறுத்தனர். இந்நிலையில், இந்துமுன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் நேரில் சென்று பேசி அந்த இடத்தில் முக்தி அடைந்த மதுரை ஆதீனம் அருணகிரிநாதருடைய இறுதிச்சடங்குகளுக்கும் சமாதியை அமைக்கும் பணிகளுக்கும் ஏற்பாடு செய்தார்.

# வலையில் சிக்கிய மீம்கள்





# மகான் ஸ்ரீ அரவிந்தர்

விஜயபாரதம்

சுதந்திரப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாளர், கல்லூரி முதல்வர், ஆன்மிக ஞானி எனப் பன்முகத் தன்மைகளுடன் பரிணமித்தவர் மகான் ஸ்ரீ அரவிந்தர். சுதந்திரப் போராட்ட வீரராகப் பல்வேறு வீர தீரச் செயல்களுடன் தனது வாழ்க்கையைத் தொடங்கியவர் மக்களிடையே ஆன்மிக எழுச்சியை உருவாக்கிய மாபெரும் ஞானி.

கொல்கத்தா நகரில் 1872, ஆகஸ்ட் மாதம் 15ல் கிருஷ்ண தனகோஷ் ஸ்வர்ணலதா தேவி தம்பதிக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் அரவிந்த் அக்ராய்ட் கோஷ்.

1905ல் வைசிராய் கர்சன் பிரபு வங்கப் பிரிவினையை ஏற்படுத்தினார். பிரிவினைக்கு எதிராக 1906ல் மிகப்பெரிய அளவுக்குக் கலவரங்கள் வெடித்தன. கொல்கத்தாவில் உள்ள வங்காள தேசியக் கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த அரவிந்தரை, விடுதலைப் போராட்டத்துக்கு இழுத்துச் சென்றது இந்தப் பிரிவினைக் கொள்கைதான்.

`வந்தே மாதரம்' இதழில் ஆங்கிலேய அரசு, வங்கப் பிரிவினைக்கு எதிராக விடுதலையைத் தூண்டும் கட்டுரைகளை எழுதி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினார். போராட்டங்கள் நடத்தினார். 1907, 1908ம் ஆண்டுகளில் இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார் அரவிந்தர். குற்றம் நிரூபிக்கப்படாததால், 1909ல் விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர், அரசியலிலிருந்து விலகி, ஆன்மிக யோக நெறிகளில் கவனத்தைச் செலுத்தலானார். சிறையில் இருந்த காலத்தில் அவர் படித்த நூல்கள், உபதேசங்கள், கீதை ஆகியவை அவரை ஆன்மிகத்தை நோக்கி இழுத்தன. பரமனின் ஆட்சியைப் பூமியில் நிலை நிறுத்த ஆன்மிக விடுதலை ஒன்றே தீர்வு என்று கண்டுகொண்டார்.

பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரிக்கு வந்தார் அரவிந்தர். 1926ல் ஆசிரமம் அமைத்து தியானத்திலும் யோகத்திலும் ஈடுபட்டார். ஆன்மிகத்தை பரப்பினார். பாரதியுடன் நட்பு கொண்டது, ஸ்ரீ அன்னை, அரவிந்தரைச் சந்தித்தும் இக்காலகட்டத்தில்தான். அரவிந்தர் தனது ஒப்பற்ற காவியமான `சாவித்ரி'யைப் படைத்தார்.

ஒரு சுதந்திரப் போராட்ட வீரராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கி பின்நாளில் மகா யோகியாகவும், ஞானியாகவும், மகானாகவும் வாழ்ந்தவர் ஸ்ரீ அரவிந்தர். அவரது அவதார நாள்தான் பாரதத்தின் சுதந்திர தினமும்.